

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 80

சனிக்கிழமை
14 பெப்ரவரி 2026

மாசி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில்

# சிவராத்திரி வழிபாடுகளுக்கு தடை ஏற்படுத்த வேண்டாம்!

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

**வவுனியா, பெப்ரவரி 14**

**வவுனியா - வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில், சைவமக்கள் சுதந்திரமான முறையில் சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார்.**

»11

## பங்கசுத் தொற்றுடன் தூள் உற்பத்தியாளருக்கு சிறை

### பருத்தித்துறை நீதிமன்றம் அதிரடி

யாழ்ப்பாணம், பெப். 14

பொலிகண்டி பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில், பங்கசுத் தொற்றுடன் கட்டைத்தூளை உற்பத்தி செய்து விநியோகம் செய்த உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணத்துடன் ஒரு மாத சிறைத்தண்டனை விதித்து பருத்தித்துறை நீதவான்

»11

அதிகாரப்பகிர்வை வலியுறுத்திய

## முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண மறைவு



கொழும்பு, பெப். 14

தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு அவசியம் என நீண்ட காலமாக வலியுறுத்திவந்த இடதுசாரித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண

»11

## அரகலய போராட்டம்; நாங்கள் விசாரிப்போம்

### நாமல் ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, பெப். 14

அரகலய தொடர்பிலும், அதற்காக வெளிநாடுகளில் இருந்து வந்த பணம் மற்றும் பின்புலம் தொடர்பிலும் எமது ஆட்சியில் ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்

»11

## அரகலய குழப்பங்களுக்கு ராஜபக்ச தரப்பே காரணம்!

### அமைச்சர் வசந்த சமரசிங்க பதிலடி

கொழும்பு, பெப். 14

மிக அமைதியாக நடைபெற்ற அரகலய போராட்டங்களை ராஜபக்ச தரப்பினரே குழப்பமான நிலைக்கு இட்டுச் சென்றனர் என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரகலய தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்

»11



## மணல் கடத்திய வாகனத்தை சுட்டுப் பிடித்தனர் பொலிஸார்

### தர்மபுரத்தில் சம்பவம்

கிளிநொச்சி, பெப். 14

தர்மபுரம்பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட தேராவில் பகுதியில், மணல் கடத்தலில் ஈடுபட்ட வாகனமொன்றை துப்பாக்கிச் சூடு நடத்தி நேற்று அதிகாலை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். வானத்தை நிறுத்துமாறு பொலிஸார் உத்தரவிட்ட போதிலும், அந்த வாக

»11

யாழ்.பல்கலைக்கழக

## பேரவையிலிருந்து நீக்கப்பட்டவரை மீளவும் இணைக்குமாறு உத்தரவு!

### சட்டப் போராட்டத்துக்கு வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையில் இருந்து முறையான காரணம் இன்றித் தன்னை நீக்கியமைக்கு எதிராக, காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் வடமாகாணப் பணிப்பாளர் ரி.விமலன் வழக்குத் தொடர்ந்

»11

## சமஷ்டி முறைமையே தமிழர்களுக்குத் தீர்வு

### ஏக்கிய இராச்சிய திட்டத்தை மறுக்கும் கலந்துரையாடலுக்கு பேரவை அழைப்பு

கொழும்பு, பெப். 14

தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, ஏக்கிய இராச்சிய அரசமைப்பை நிராகரித்து, அதற்குப் பதிலாக சமஷ்டி முறையில் அமைந்த அதிகாரப் பகிர்வை வழங்குமாறு ஒரே குரலில் வலியுறுத்தும் கலந்துரையாடல் ஒன்றுக்கு தமிழ்த் தேசியப்

»11



“தடுக்க நினைக்கிற பொலிஸுக்கு செக்கென்ன சிவலிங்கமென்ன, எல்லாம் ஒண்டுதான் கண்டியளோ”

## தமிழீழம் என்பது பிரிவினையல்ல!

தமிழர் வரலாற்றின் அடித்தளம்
சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

**விரிவு பக்கம்:- 07**

## வங்காள விரிகுடாவில் நாளை தாழமுக்கம்!

**விரிவு பக்கம்:- 05**


## சட்டவிரோதக் கடற்றொழிலை உடனடியாகக் கட்டுப்படுத்துக

### முல்லைத்தீவு மீனவர்கள் போராட்டம்!

முல்லைத்தீவு, பெப். 14

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட மீனவ அமைப்புகள் ஒன்றிணைந்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்

»11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4346 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 23 28 32 33 |
| விசேட எழுத்து | Y |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1413 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 03 06 46 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0372 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 5 1 0 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2452 |
| ஆங்கில எழுத்து | G |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கங்கள் | 09 63 68 78 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6104 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 5 7 4 0 5 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2134 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 15 51 62 80 |
| விசேட எழுத்து | D |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0220 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 24 30 |

# இலங்கையின் பொறுப்புக்கூறலை வெளிநாடுகள் திணிக்கமுடியாது!

## அவுஸ்திரேலியத் தூதுவர் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.14**

**இலங்கையின் நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் வெளிநாடுகளால் திணிக்கப்பட முடியாதவை. அவை இலங்கையர்களாலேயே வழிநடத்தப்படவேண்டும். ஆயினும் இலங்கையின் நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளுக்கு அவுஸ்திரேலியா தனது முழுமையான ஆதரவை வழங்கும் என்று இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மத்தேவ் டக்வெர்த் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'பாத்பைண்டர்' அமைப்பின் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பது இலங்கையர்களால் முன்னெடுக்கப்படும் ஒரு செயற்பாடாக அமைய வேண்டும். அவுஸ்திரேலியாவோ அல்லது வேறு எந்த நாடோ அதைத் தொடக்கி வைக்கவோ அல்லது கட்டாயப்படுத்தவோ முடியாது.

கடந்த சில ஆண்டுகளாகக் கவனிக்கப்படாமல் விடப்பட்ட விவகாரங்களை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகத் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அளித்துள்ள வாக்குறுதிகள் ஊக்கமளிப்பதாகவுள்ளன.

இலங்கை அரசுகோரிக்கை விடுத்தால், அவர்களுக்குப் பயனுள்ள வகையில் எந்த வகையிலும் உதவ அவுஸ்திரேலியா தயாராக இருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானங்களை அவுஸ்திரேலியா நீண்டகாலமாக ஆதரித்து வருகின்றது. பொறுப்புக்கூறலை முன்னோக்கி நகர்த்த இது ஒரு முக்கியமான வழிமுறை. நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் இலங்கையரால் வழிநடத்தப்படும் ஒரு முயற்சியாக அமையும் பட்சத்தில் அதற்குத் தேவையான பங்களிப்பை வழங்க அவுஸ்திரேலியா ஒரு பங்காளியாக இருக்கும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0812 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 6 2 1 6 6 1 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3078 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 31 38 43 73 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 18 41 70 79 |
| வெற்றி வாரம் | 5239 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0908 |
| வெற்றி இலக்கம் | 24 26 50 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ராசி | கன்னி |
| வெற்றி இலக்கம் | 15 46 48 57 |
| சீட்டிழுப்பு வாரம் | 4790 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 27 |
| வெற்றி இலக்கம் | 10 13 16 32 |
| வெற்றி வாரம் | 2254 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 13.02.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 07 16 63 65 |
| வெற்றி வாரம் | 2904 |

## பாலியல் துஷ்பிரயோகம்; இலங்கையர் பிரிட்டனில் கைது

கொழும்பு, பெப்.14

பிரித்தானியாவின் 19 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை உள்ளிட்ட கடுமையான குற்றச்சாட்டுகளின் பேரில் 21 வயதுடைய இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் சவுத்தாம்ப்டன் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

## எம்.பி.க்களின் ஓய்வூதியம் நீக்கம்; நாடாளுமன்றக் குழு அங்கீகாரம்

கொழும்பு, பெப்.14

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்கான 'நாடாளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டவரைவுக்கு ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் நஜித் இந்திக தலைமையில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற இந்தக் குழுவின் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தேச சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், அதன் 3ஆம் பிரிவின் கீழ், சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் அல்லது அதற்குத் தகுதியுடையவர்கள் என அனைவருக்குமே ஓய்வூதியம் உடனடியாக நிறுத்தப்படும். இந்தச் சட்டவரைவு தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. (ச-இ)

## மெட்ரோ பஸ் சேவை ஓகஸ்ட்டில் ஆரம்பம்

கொழும்பு, பெப்.14

கொழும்பு நகரில் தற்போது நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாகவும், பொதுப் போக்குவரத்தை நவீனமயமாக்கவும் அரசாங்கம் 'லங்கா மெட்ரோ ட்ரான்ஸிட்' எனும் புதிய பேருந்து சேவையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் அறிமுகப்படுத்தவுள்ளது.

இதற்கான நவீன பேருந்துகள் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்துக்குள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளன. இதற்கான உட்கட்டமைப்பு வசதிகளைத் தயார்படுத்தும் பணிகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பைச் சுற்றியுள்ள 6 பிரதான வீதிகளை மையப்படுத்தி இந்தத் திட்டம் முதற்கட்டமாகச் செயற்படுத்தப்படவுள்ளது.

தினசரி கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் தனியார் வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, பயணிகள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த ஊக்குவிப்பதே இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும் இந்தத் திட்டம், அடுத்தகட்டமாக காலி மற்றும் கண்டி மாவட்டங்களுக்கும், அடுத்த 3 ஆண்டுகளுக்குள் நாட்டின் 8 பிரதான நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. (ச-இ)

## குடிவரவுத் திணைக்கள சேவைகள் வழமைக்கு!



கொழும்பு, பெப்.14

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தரவு கட்டமைப்பில் ஏற்பட்டிருந்த தொழில்நுட்பக்கோளாறு தற்போது சீரமைக்கப்பட்டுள்ளது.

தற்போது பத்தரமுல்லையில் உள்ள பிரதான அலுவலகம் மற்றும் ஏனைய அலுவலகங்களில் உள்ள தரவுக் கட்டமைப்பு வழமைக்குத் திரும்பியுள்ளது என்று அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சாதாரண மற்றும் ஒருநாள் சேவையின் அடிப்படையிலான கடவுச்சீட்டு விநியோகம் மற்றும் விசா விநியோக சேவைகள் என்பன வழமை போல் இடம்பெறுகின்றன என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## நெற்கொள்வனவு முறிப்பில் ஆரம்பம்

முல்லைத்தீவு, பெப்.14

முல்லைத்தீவு - முறிப்புப் பகுதியில் நெல் சந்தைப்படுத்தல் சபையினர் விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவை ஆரம்பித்துள்ளனர்.

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் ஒரு விவசாயிடமிருந்து 14வீத ஈரப்பதன் உடைய 2500 கிலோகிராம் நெல் கொள்வனவுசெய்யப்பட்டுவருவதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் உதவிப் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தாண்டில் இதுவரை

# 263 வீதி விபத்துகள்; 276 பேர் உயிரிழப்பு




கொழும்பு, பெப்.14

**இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 263 வீதி விபத்துகளில் 276 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்புக்கான துணைப் பொலிஸ் கண்காணிப்பாளர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.**

2025ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு விபத்துகளின் எண்ணிக்கை 24 ஆல் அதிகரித்துள்ளது. அதேநேரத்தில் உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் 27 ஆல் அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆண்டு பதிவான உயிரிழந்தவர்களில் 32 வீதம் பேர் பாதசாரிகள் என்றும், 36 வீதம் பேர் அல்லது 98 பேர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் என்றும் தெரியவந்துள்ளது. இதேவேளை 2025 ஆம் ஆண்டில் 2,597 வீதி விபத்துகள் பதிவாகியதில் 2,746 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழப்புகள் மற்றும் கடுமையான காயங்களைக் குறைப்பது அனைவரதும் தேசியப் பொறுப்பாக மாற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## தேசிய மகளிர் தினம்; மாத்தறையில் ஏற்பாடு

மாத்தறை, பெப்.14

2026ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தின தேசிய விழாவை இம்முறை மாத்தறையில் நடத்துவதற்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சர்வதேச மகளிர் தினம் ஆண்டுதோறும் மார்ச் மாதம் 8ஆம் திகதி கொண்டாடப்பட்டு வரும் நிலையில், இந்த ஆண்டுக்கான உலகளாவிய கருப்பொருளாக 'உரிமைகள், நீதி, செயல், அனைத்துப் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்காக' என்பதை ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த சர்வதேச கருப்பொருளுக்கமைய இலங்கையின் தேசியமட்டத்திலான பிரதான கொண்டாட்டங்களை மாத்தறை ருகுணு பல்கலைக்கழகத்தின் இரவீந்திரநாத் தாகூர் மண்டபம் மற்றும் மாத்தறை கடற்கரைப் பூங்கா ஆகிய இடங்களில் நடத்துவதற்குப் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. (ச-இ)

## கொழும்பு மாநகரசபை உறுப்பினர் பதவிநீக்கம்

கொழும்பு, பெப்.14

கொழும்பு மாநகரசபையின் உறுப்பினராக செயற்பட்டுவந்த மொஹமட் பாத்திமா சொஹாரா புஹாரி பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி முன்வைத்த வரவு - செலவுத் திட்டத்துக்கு அவர் ஆதரவாக வாக்களித்து கட்சி விதிகளை மீறியுள்ளாரென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அவரின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்தியதையடுத்து அவர் மாநகரசபையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். (ச-இ)

## 'டித்வா' பாதிப்பு நிவாரணம்; ரூ.4.5 பில்லியன் பகிர்ந்தளிப்பு

கொழும்பு, பெப்.14

'டித்வா' புயலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதற்காக 25 மாவட்டங்களுக்கும் 4.5 பில்லியன் ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கே.டி. தர்மதிலக தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். முழுமையாகவும், பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளின் நிர்மாணப்பணிகளுக்காக 41.6 பில்லியன் ரூபா சகல மாவட்டங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மீள் குடியேற்ற வேலைத்திட்டத்துக்காக 2.1 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதன் முன்னேற்றம் குறித்துஜனாதிபதிசெயலகத்தில் வாராந்தம் அறிக்கை பெறப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## இலங்கையில் முதன்முறையாக தீப்பாதுகாப்பு ஆய்வுமையம்

கொழும்பு, பெப்.14

இலங்கையின் கட்டுமான மற்றும் உள்கட்டமைப்புத்துறையைப் பாதுகாப்பான முறையில் சர்வதேசத் தரத்துக்கு உயர்த்துவதற்கான மைல்கல்லாக, நாட்டின் முதலாவது 'தீப் பாதுகாப்புப் பொறியியல் ஆய்வுமையம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் மத்தேகொடவில் அமைந்துள்ள அதன் பொறியியல் பீட வளாகத்தில் இந்த அதிநவீன ஆய்வுமையம் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்டுள்ளது. இதுவரை இலங்கையில் கட்டுமானப் பொருள்களின் தீத் தடுப்புத் திறனைச் சோதிக்க வசதிகள் இல்லாததால், உற்பத்தியாளர்கள் வெளிநாட்டு ஆய்வகங்களையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. இதனால் அதிக செலவு மற்றும் காலதாமதம் ஏற்பட்டது. அதைத் தவிர்க்க பேராசிரியர் கே.எம்.சி. கொண்டசிங்கவின் வழிகாட்டலில் 250 மில்லியன் ரூபா முதலீட்டில் இந்த மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுமையம் உலகளாவிய தரக்கட்டளைகளுக்கு இணங்க மிக நவீன வசதிகளைக் கொண்டுள்ளது. 3x3 மீற்றர் அளவுள்ள சுவர்கள் மற்றும் 4x3 மீற்றர் அளவுள்ள தளங்களை நேரடியாகத் தீக்குட்படுத்தி ஆய்வுசெய்யமுடியும். கட்டுமானப் பொருள்களின் வெப்பக் கடத்துத்திறனை 750C வரையிலும், இதர பண்புகளை 1200C வரையிலும் துல்லியமாக அளவிடமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## காசிசண்டால் துவக்கும்....!

அல்லைப்பிட்டியில 17 வயதுப் பெடியனைப் பொலிஸ்காரர் சுட்டுச் சாக்காட்டின ரத்தம் இன்னும் காயேலை, அதுக்குள்ள அந்தப் பெடியனைப் 'போதைப்பொருள் பாவிச்சவன்' எண்டும், 'கள்ள மாடு கடத்துறவன்' எண்டும் முத்திரை குத்தி இந்தக் கொலையை நியாயப்படுத்த கொஞ்சப்பேர் வெளிக்கிட்டிருக்கினம். அதில ஒருத்தர் 'இப்பிடிப் பட்டவங்களை பொலிஸ் சுட்டது பிழையே இல்லை' எண்டு ரீவியளுக்கும் பேட்டி குடுத்திருக்கிறார். அப்பிடி ஊருக்கு உபதேசம் பண்ணுறவர் ஆரெண்டு பார்த்தால், 2017ஆம் ஆண்டு கஞ்சாவோட பிடிபட்டு கனகாலமா ஜெயிலுக்க இருந்து, பிறகு இன்ரலிஜெண்ட்காரரின் புண்ணியத்தில வெளியில வந்து, எங்கட தேசியத்தைக் குழப்ப நினைக்கிற புலனாய்வுப் புள்ளிதான் அவர். அப்ப அவர் கொழும்பில கஞ்சா கடத்தேக்க பொலிஸ்காரர் சுட்டிருந்தாலும், இப்பிடித்தான் சொல்லியிருப்பாரோ? மாடு கடத்துறதைவிட கஞ்சா கடத்துறதுதான் கடுங்குற்றம். அப்பிடிப்பட்டவர் இப்ப எல்லாருக்கும் புத்தி சொல்லுறன் எண்ட பேரில, பொலிஸ்காரருக்கு வால் பிடிக்க வெளிக்கிடுறார்.

கஞ்சாவோட பிடிபட்ட அவருக்கே வாழுற ஆசை இருக்கேக்க, ஒரு பதினேழு வயசுப் பெடியனை, வாழவேண்டிய வயதில சாக்கொண்டதை சரி எண்டு சொல்ல எப்பிடி மனம் வருகுது? ஆயிரம் கிலோ 'குஷ்' கடத்தின முதலாளிமாரின்ர பிள்ளையளுக்கும், குடிபோதையில காரை ஓடிக்கொண்டு போய், றோட்டில போய்வாறவையை இடிச்சுத்தள்ளின ஜே.வி.பி. எம்.பி.க்கும் சலூட் அடிக்கிற நாட்டில, இந்தப் பெடியனை மட்டும் சுட்டுக்கொல்லுற அதிகாரத்தை ஆர் குடுத்தது? அந்தப் பெடியன் 'மாடு கடத்தினான்' எண்டு ஒரு குரூப் சொல்லுது. ஒருவேளை அது உண்மையாவே இருக்கட்டும். ஆனால், மட்டக்களப்பு மயிலத்தமடுவில எங்கட தமிழ்ச்சனம் வளர்த்த, அதுகளின்ர வாழ்வாதாரமா இருந்த நூற்றுக்கணக்கான மாடுகளைச் சிங்களக் குடியேற்றவாசியள் சுட்டுக்கொல்லேக்க, இந்த ஜே.வி.பி. 'புத்திசாலியளும்', திடீர் புலனாய்வு உபதேசப் புள்ளியளும் எங்க போனவை? அப்பவெல்லாம் மாடுகளுக்காகவும் சனத்துக்காகவும் அழாதவை, இப்ப மாடுகளுக்காக பெடியனைச் சுட்டாலும் பரவாயில்லை எண்டு திடீர்ப் பாசத்தை மாடுகளில காட்டுற மர்மம் தான் இன்னும் விளங்கேலை.

நேவிக்காரர் வைச்ச கண் வாங்காமல் கண்காணிக்கிற கடலாலதானே ஹெரோய்ன், கஞ்சா, குஷ், ஐஸ் எண்டு ஊரிப்பட்ட போதைப்பொருள் எல்லாத்தையும் கடத்திக்கொண்டு வாறாங்கள். எப்பவாவது அப்பிடியொரு போதைப்பொருள் கடத்தல்காரனை நேவி சுட்டதெண்டு கேள்விப்பட்டிருக்கிறியளோ? ஏனெண்டால், கடத்தல்காரன்ர காசுக்கு முன்னால நேவியின்ர துவக்குகள் வேலைசெய்யாமல்போடும். இப்பிடிஏழைஎளியதுகள் எண்டால் மட்டும்தான் அவையின்ர துவக்குகளுக்கு ரோசம் வந்து சுட்டுத்தள்ளும் போல. செத்த பெடியன் மேல பழி போடுறதை விட்டிட்டு, அந்தத் துவக்கால சுட்டவையைச் சட்டத்துக்கு முன்னால நிப்பாட்டி அவைக்குத் தண்டனை குடுக்கிற வழியைப் பாருங்கோவன்!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகளவு நீர் உறிஞ்சப்படுவதால் கைதடியில் கிணறுநீர் தாழிறக்கம்

## பிரதேசசபை உறுப்பினர்கள் விசனம்

**யாழ்ப்பாணம், பெப்.14**

**கைதடிப் பிரதேசத்தில் தனிநபர்களால், வணிக நோக்கத்துக்காக நாளாந்தம் அளவுக்கதிகமாக நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதால், பிரதேசத்தின் கிணறுகளின் நீர்மட்டம் தாழிறங்கியுள்ளது. இதனால் நிலத்தடி நீருக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று கைதடிப் பிரதேச சாவகச்சேரிப் பிரதேசசபையின் உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இதுதொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது-

இதுதொடர்பில் சாவகச்சேரிப் பிரதேசசபையின் உறுப்பினர் திருமதி கலைவாணி நிரஞ்சன், 2022 ஆம் ஆண்டு பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தார். இந்தப் பிரேரணை சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் சாவகச்சேரிப் பிரதேசசபையால் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கைதடி வடக்கில் நாள்தோறும் அளவுக்கதிகமான கிணற்று நீர் தாங்கிகள் மூலம் வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றது. அத்துடன்கைதடி தெற்கில்குழாய்க்கிணறு மூலம் நீர் பெறப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறான நடவடிக்கைகளால் கைதடிப் பிரதேசத்தில் முன்னர் 20 அடிப் கிணறுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட குடிதண்ணீரானது, 50 அடி முதல் 60 அடி வரை தாழிறங்கி விட்டது.

இந்த விடயம் தொடர்பில் தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலாவது தீர்மானம் எடுக்கப்படவேண்டும்-என்றனர். (க-159)

## சிவராத்திரி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், பெப்.14

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை சிவராத்திரியன்று சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. சிறப்பு நிகழ்வாக சத்தியதாஸ் குழுவினரின் பார்வதி திருமணம் எனும் வில்லிசைக் கச்சேரி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

***

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சிவராத்திரியன்று 4 சாமப்பூசைகள் இடம்பெறும். மறுநாள் திங்கட்கிழமை நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

***

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று மாலை 6 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து 4 சாமப் பூசைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

***

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் சிவராத்திரியன்று இரவு 8 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-17)



## மின்வேலியில் சிக்கி யானை உயிரிழப்பு

மட்டக்களப்பு, பெப்.14

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடைப் பகுதியில் காட்டுயானை ஒன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

விளைநிலங்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியே இவ்வாறு உயிரிழந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## சிவராத்திரி பூசைகள்

யாழ்ப்பாணம், பெப்.14

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் (கண்ணகையம்மன் ஆலயம்) தேவஸ்தான மகா சிவராத்திரி உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு விசேட பூஜை ஆராதனைகளுடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து நான்கு யாமப் பூசைகள் இடம்பெறவுள்ளன.

மகா சிவராத்திரி விரதத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களினதும், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மாணவர்களினதும், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவர்களினதும், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மாணவர்களினதும், மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களினதும் கலை கலாசார நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (எ-41)

## வடமராட்சி வடக்கு மீளாய்வுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.14

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தின், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், பிரதேச செயலர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

கடந்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான முன்னேற்ற நிலைமைகள் தொடர்பில் ஆராயும் நோக்குடன் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கைப் போக்குவரத்துச்சபை மற்றும் தனியார் பேருந்துச் சேவைகளின் பிரச்சினைகள், கடற்கரை வான் அகழ்வின்போது அகழப்பட்ட மணலை அகற்றும் விடயம் உட்பட பல்வேறு முன்னேற்றச் செயற்பாடுகள் கலந்துரையாடப்பட்டன. பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகள், பொது அமைப்புகள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-100)



## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண்செலவுகள் ஏற்படக்கூடும். மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**இடபம்:** காலையில் சற்றுச் சோர்வாக இருக்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளுக்காக செலவுசெய்ய நேரிடும். தாயின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். கணவன்–மனைவிக்கிடையே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாய்வழி உறவுகளுக்காகச் செலவு செய்யவேண்டி வரும்.

**கன்னி:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும்.

**துலாம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அதன் காரணமாக கையிருப்புக் கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்.

**விருச்சிகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** இன்று எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** எதிலும் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## வரிப் பொருளாதாரத்திற்கு அப்பால்....!

இலங்கையின் பொருளாதாரச் சக்கரம் சுழல்வதற்கு வரியும் சுற்றுலாவும் அச்சாணிகளாக இருக்கலாம், ஆனால் அவை மட்டுமே ஒரு தேசத்தின் நிரந்தர உயிர்நாடியாக இருக்கமுடியாது என்பதை தற்போதைய சூழல் உரக்கச் சொல்லத் தொடங்கியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர முன்வைத்துள்ள 'தொழில்முனைவு சார்ந்த அரசாங்கம்' என்ற கருத்தாக்கம், வெறும் அரசியல் விமர்சனமாக அன்றி, ஒரு தேசத்தின் பொருளாதார விடுதலையின் குரலாகவே ஒலிக்கின்றது. கடந்த கால அரசாங்கங்களைப் போலவே, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பழகிப்போன வரிவிதிப்பு மற்றும் சுற்றுலா வருமானம் என்ற வட்டத்திற்குள்ளேயே சுழன்றுகொண்டிருப்பது ஏமாற்றமளிக்கிறது. வரியையும் சுற்றுலாவையும், இன்னும் தொன்றுதொட்டு இருக்கும் தேயிலை மற்றும் இறப்பரையும் மட்டுமே வருவாய் மூலங்களாகக் கொண்டு இயங்குவதற்குப் பெயர் 'மாற்றம்' அல்ல; அது காலாவதியான கொள்கைகளின் நீட்சியே தவிர வேறொன்றுமில்லை.

வரிவிதிப்பு என்பது ஒரு நாட்டின் நிர்வாகச் செலவுகளுக்கான கருவியாக இருக்கவேண்டுமே தவிர, அதுவே பொருளாதாரத்தின் பிரதான மூலமாக மாறும்போது அந்த நாடு வளர்ச்சியின் எல்லையைத் தொடமுடியாது. சுற்றுலா என்பது இயற்கை வழங்கிய கொடை, ஆனால் அது ஒரு நாட்டின் முதுகெலும்பாக இருக்கமுடியாது. இலங்கைக்கு மிகச்சிறந்த பாடத்தைச் சவூதி அரேபியா கற்பித்துக்கொண்டிருக்கிறது. அள்ள அள்ளக் குறையாத கச்சா எண்ணெயும், புனிதத் தலங்கள் வழியாகக் குவியும் கோடிக்கணக்கான டொலர் வருமானமும் இருந்தபோதிலும், சவூதி தனது எதிர்காலத்தைத் தற்சார்புப் பொருளாதாரத்தை நோக்கியே நகர்த்துகிறது. பாலைவனங்களைப் பசுமைச் சோலைகளாக்கி, விவசாயத்தையும் பண்ணைகளையும் உருவாக்கி வரும் சவூதியின் வேகம், சகல இயற்கை வளங்களையும் தன்னகத்தே கொண்ட இலங்கைக்கு ஒரு சவாலாகும். நாம் எப்போது எமது இறக்குமதித் தேவைகளுக்காக டொலரில் கையேந்துவதை நிறுத்தி, தன்னிறைவை அடைகின்றோமோ அன்றுதான் இந்த நாட்டில் உண்மையான மாற்றத்துக்கான விதை துளிர்விட்டதாகக் கருதமுடியும்.

பொருளாதார மறுசீரமைப்பு என்பது வெறும் சுங்கத் திணைக்களத்தையும், வரி அறவீடுகளையும் நவீனப்படுத்துவது மட்டுமல்ல; அது நாட்டின் உற்பத்தி மூலங்களை விரிவாக்கம் செய்வதாகும். ஒவ்வொரு குடிமகனையும் செல்வம் ஈட்டக்கூடிய தொழில்முனைவோராக மாற்றுவதே ஒரு நவீன அரசாங்கத்தின் கடமையாகும். இருப்பினும், இலங்கையின் சாபக்கேடாகத் தொடரும் இனவாதமும் மதவாதமும் இத்தகைய ஆத்மார்த்தமான மாற்றங்களுக்குப் பெரும் முட்டுக்கட்டைகளாக அமைகின்றன. குறுகிய அரசியல் இலாபங்களுக்காக மக்களைப் பிரித்தாளும் மனநிலை இருக்கும் வரை, ஒரு பரந்த பொருளாதாரச் சிந்தனை இங்கே உருவாவது சந்தேகமே. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெறும் நிர்வாகச் சீர்திருத்தங்களுடன் நின்றுவிடாமல், நாட்டை ஒரு தொழில்முனைவுத் தளமாக மாற்றும் தீர்க்கமான கொள்கைகளை வகுக்க வேண்டும். அவ்வாறானதொரு துணிச்சலான நகர்வு மட்டுமே இலங்கையை நிரந்தரப் பொருளாதாரச் சரிவிலிருந்து மீட்கும் ஒரே வழியாகும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





### பொய்யாமொழி

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

**பொருள்:** இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.




## புதிய கல்விச்சபையை நிறுவும் முதற்கட்ட நடவடிக்கை பூர்த்தி!

**கொழும்பு, பெப்.14**
**இலங்கையின் கல்வித்துறையில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய கல்விச்சபையை நிறுவுவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.**

இதற்கென நியமிக்கப்பட்ட விசேட நிபுணர் குழுவின் அறிக்கைக்கு நாடாளுமன்றத் துணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.
கல்விச்சபையை நிறுவுவதற்கான நாடாளுமன்றத் துணைக்குழுவின் தலைவரும் தொழில் பிரதி அமைச்சருமான மஹிந்த ஜயசிங்க அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
இந்த நிபுணர் குழு அறிக்கையை கல்வி அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக்குழுவிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 18ஆம் திகதி கல்வி அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக்குழு கூடவுள்ளது. அன்று அதற்கான அங்கீகாரம் பெறப்படும். ஆசிரியர் அதிபர் சங்கங்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் தமது ஆக்கபூர்வமான கருத்துகளையும் யோசனைகளையும் முன்வைப்பதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படும். இறுதி அறிக்கை வெறும் ஆவணமாக மட்டும் இருக்காது அதை ஒரு சட்டமாக நடைமுறைப்படுத்துவதே எமது இலக்காகும்- என்றார். (எ-இ)

## ஏழு பல்கலைகளுக்கு புதிய விடுதி வசதிகள்

கொழும்பு, பெப்.14
நாட்டிலுள்ள ஏழு பல்கலைக்கழகங்களில் புதிய விடுதி வசதிகளை நிர்மாணிப்பதற்கான திட்டங்களைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
பல்கலைக்கழக மாணவர்களிடையே நிலவும் தங்குமிட வசதிகளுக்கான கடும் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய விடுதிகள் மூலம் குறைந்தது 2,400 மாணவர்கள் தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. கல்வி அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (எ-இ)

## ஓய்வூதியர்களுக்கு டிஜிற்றல் வசதிகள்

கொழும்பு, பெப்.14
ஓய்வூதியர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகளின் நலனைக் கருத்திற்கொண்டு, ஓய்வூதியத் திணைக்களம் இணையத்தளம் மற்றும் கைபேசி செயலி ஊடாகப் புதிய வசதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
வயதான ஓய்வூதியதாரர்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதைத் தவிர்க்கவும், வெளிப்படையான மற்றும் விரைவான சேவையை உறுதிப்படுத்தவும் இந்த டிஜிற்றல் மயமாக்கல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## தாழமுக்கம் உருவாகும் சாத்தியம்

கொழும்பு, பெப்.14
நாளை ஞாயிற்றுக்கிழமை தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்பில் குறைந்த அமுத்த மண்டலம் ஒன்று உருவாகக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. இதுதொடர்பான மேலதிக விவரங்கள் மற்றும் எதிர்கால வானிலை முன்னறிவிப்புகள் தொடர்பாக பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)



## மூன்றில் ஒருவருக்கு அதிக உடற்பருமன்!

கொழும்பு, பெப்.14
இலங்கையின் வயது வந்தோரில் மூன்றில் ஒரு பகுதியினர் அதிக உடல் எடை அல்லது உடற்பருமன் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளதாகப் புதிய ஆய்வு ஒன்று எச்சரித்துள்ளது. ஆண்களை விட பெண்களிடையே உடற்பருமன் வீதம் சுமார் 10 வீதம் அதிகமாகக் காணப்படுகிறது. சிறுவர்களிடையே இந்தப் பாதிப்பு குறைவாக இருந்தாலும், சுமார் 12 சதவீத பதின்ம வயதினர் அதிக உடல் எடை கொண்டவர்களாக உள்ளனர். உடற்பருமன் அதிகரிப்புக் காரணமாகத் தொற்றா நோய்களின் தாக்கமும் இலங்கையில் அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

**நாளை**
ஞாயிற்றுக்கிழமை - மாசி 03
15.02.2026
சுபநேரம் : 09.33 - 11.03
ராகுகாலம் : 05.03 - 06.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் விவகாரத்தில் அநுர அரசாங்கமும் மௌனம்



## வடமாகாண கடற்றொழில் இணையம் குற்றச்சாட்டு

மன்னார், பெப்.14

**நாட்டில் ஏற்பட்ட டித்வா புயலுக்குப் பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறல் ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் வரும் என எதிர்பார்த்தோம். ஆனால் புயலுக்குப் பின்னர் அவர்களின் வருகை இன்னும் அதிகரித்துள்ளது. இந்த விடயத்தில் அநுர அரசாங்கமும் மௌனமாகவே உள்ளது என்று வடமாகாண கடற்றொழில் இணையத்தின் செயலாளர் என்.எம் ஆலம் தெரிவித்துள்ளார். மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மன்னார் தொடக்கம் தெற்குப்பகுதியாகவுள்ள சௌத்பார், வங்காலை, சிலாபத்துறை, முள்ளிக்குளம் உள்ளிட்ட கடற்பகுதிகளில் தற்போது இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. இந்திய மீனவர்கள் தொடர்பாக நாங்கள் அரசுக்கு பல்வேறு தடவைகள் தெளிவுபடுத்தினாலும், அரசாங்கம் குறித்த விடயத்தைக் கண்டுகொள்வதாக இல்லை.

அதேவேளை வடபகுதியில் தடைசெய்யப்பட்ட தொழில் முறைமைகள் நிறுத்தப்படவேண்டும்என்று அண்மையில் தபாலட்டைகள் ஊடாக ஜனாதிபதிக்கும், கடற்றொழில் அமைச்சருக்கும் கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். பிரதானமாக உள்ளூர் இழுவைப்படகுத் தொழில், டைனமைட், சுருக்குவலை, உள்ளிட்ட தடைசெய்யப்பட்டதொழில் நடவடிக்கைகளையும் நாங்கள் சுட்டிக்காட்டினோம். தடைசெய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளால், சிறு மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். கரைவலைத் தொழிலும் பாதிக்கப்படுகின்றது. கடற்சூழலும் பாதிக்கப்படுகின்றது.

ஆனால் மீனவர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தக்கூடிய வகையில் அரசாங்கம் குறிப்பிட்ட தொழிலை மாத்திரம் நிறுத்த முடிவெடுத்துள்ளது-என்றார். (க-56)

# முகாமைத்துவ சேவைக்கு 114 பேருக்கு நியமனங்கள்

யாழ்ப்பாணம், பெப்.14

வடமாகாண சபையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 114 பேருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு யாழ். கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவால் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தரம் IIIக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட தற்கமைவாக 7 ஆயிரத்து 510 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. அவர்களில் 5 ஆயிரத்து 500 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 125 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு தகுதிபெற்ற 114 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் சார்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைப்பாளர் சு.கபிலன், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், பிரதிப் பிரதம செயலாளர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-41-66)

# கிளி–முல்லை மாவட்டங்களை இணைத்து நீர் வடிகாலமைப்புச்சபைக் காரியாலயம்

## பரிசீலிக்கப்படும் என்கிறார் அமைச்சர்



கிளிநொச்சி, பெப்.14

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை இணைத்து, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் தனியான பிராந்தியக் காரியாலயம் அமைக்கப்படுவது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் மருத்துவக் கலாநிதி சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சிக்கு வந்த அமைச்சர் இரணைமடுக் குளத்தைப் பார்வையிட்டதுடன், புதிதாக அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தையும் பார்வையிட்டார். அதன் பின்னர் அவர் ஊடகங்களுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 12 ஆயிரம் நீர் இணைப்புகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட நீர் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த இரு மாவட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்குப் பல்வேறு தேவைகள் தினமும் ஏற்படுகின்றன. அவற்றை உடனடியாக விரைந்து மேற்கொள்ள முடியாது நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த மாவட்டங்களுக்குக் கென தனியான பிராந்திய முகாமையாளர் காரியாலயம் அவசியம். நாட்டின் ஏனைய மாவட்டங்களில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப் புச்சபையின் பிராந்திய காரியாலயம் தனித்தனியாக, மாவட்ட ரீதியாக உண்டு. ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் மாத்திரமே யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இது மக்களுக்கு வினைத்திறனான விரைவான சேவையை வழங்குவதில் நெருக்கடியை ஏற்படுத்துகின்றது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு எனத் தனியான பிராந்திய முகாமையாளர் காரியாலயம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த அமைச்சர், இந்த விடயம் தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் உயரதிகாரிகளுடனும் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (க-214)

# சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் புதிய திட்டத்தின் மீளாய்வுக்கூட்டம்



யாழ்ப்பாணம்,பெப்.14

சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் திட்டத்தின், மீளாய்வுக்கூட்டம் தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

திட்ட உத்தியோகத்தர் திருமதி ச.ஜென்சி, திட்டத்தால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்தார். தொடர்ந்து சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா குறித்த திட்டத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்தார். சாவகச்சேரி சிறுகுற்றப்பிரிவுப் பொலிஸ் உத்தியோகத்தர் க.ஜெயறூபன், சமூக மட்டக் குழுக்களால் அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகளைக் கண்காணிப்பது தொடர்பில் விளக்கமளித்தார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் சி.சத்தியசோதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திட்டத்தின் கீழுள்ள 10 கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-20)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிவஞான வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழீழம் என்பது பிரிவினைவாதமல்ல தமிழர்களின் வரலாற்றின் அடித்தளம்!

## சி.வி. விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், பெப்.14**
**'ஈழம்' என்பது ஒரு புதிய சொல்லோ அல்லது பிரிவினைக்காக உருவாக்கப்பட்ட சொல்லோ அல்ல. இது இலங்கைத் தீவுக்கு வழங்கப்பட்ட மிகப்பண்டைய தமிழ்ப் பெயராகும் என்று நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்தி அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:

ஈழம் என்பது வெறும் அரசியல் கோரிக்கை மட்டுமல்ல, அது இந்த மண்ணின் பூர்வீக அடையாளம். 'ஈழம்' என்பது இலங்கையின் பண்டைய பெயர். வெளிநாட்டவர்கள் இலங்கையைக் கைப்பற்றிய போது வடக்கில் ஒரு தமிழ் இராச்சியமும், கிழக்கில் பல தமிழ் சிற்றரசுகளும் இருந்தன. டி.எஸ். சேனநாயக்க மற்றும் ஒலிவர் குணதிலக்க ஆகியோர் சூழ்ச்சி மூலம் தமிழர்களின் தாயகத்தைச் சிங்கள தெற்கின் ஒரு பகுதியாக மாற்றியதாலேயே தமிழர்கள் தமது இறையாண்மையை இழந்தனர். பிரித்தானியர் வெளியேறிய போது, வடக்குகிழக்கு பகுதிகளைச் சூழ்ச்சிகரமான முறையில் தெற்குடன் இணைத்ததன் மூலமே தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பறிபோனது.

இலங்கையில் தமிழ் மொழி 3,000 ஆண்டுகளுக்கும் மேலாகப் பேசப்பட்டு வருகிறது.

சிங்கள மொழி கி.பி. 6 அல்லது 7ம் நூற்றாண்டில்தான் தமிழ், பாலி மற்றும் சில உள்ளூர் கிளைமொழிகளின் இணைப்பாக உருவானது. இதற்கு முந்தைய கல்வெட்டுகள் மற்றும் 'சிகிரியா' சுவர் ஓவியங்களே சான்று.

சிங்கள மேலாதிக்க அரசாங்கங்கள் கொண்டு வந்த 'சிங்களம் மட்டும்' சட்டம், தரப்படுத்தல் முறை மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட வன்முறைகளே, தமிழ் இளைஞர்களைத் தமது உரிமைகளைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்தத் தூண்டியது. தமது மண்ணைப் பாதுகாக்கப் போராடியவர்களைத் தமிழ் மக்கள் 'மாவீரர்களாக' நினைவுகூருவது அவர்களின் வரலாற்று உரிமையாகும்.

சர்வதேச சட்டங்களின்படி ஒரு தேசிய இனத்துக்கு தனது அரசியல் மற்றும் பொருளாதார நிலையைத் தீர்மானிக்கும் 'சுயநிர்ணய உரிமை' உண்டு. எனவே, தமிழ் ஈழம் என்பதன் பின்னணியில் உள்ள வரலாற்று மற்றும் சட்டப்பூர்வமான நியாயங்களைச் சிங்கள சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்-என்றுள்ளது. (ச-இ)

# ஜனாதிபதி தேர்தலுக்காக உயிர்த்தெழுகின்றது சு.க.

## உபதலைவர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.14

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இப்போதே தயாராகி வருகின்றது என்று அந்தக் கட்சியின் உப தலைவர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் அவசரமாக ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இல்லை.

முதலில் கட்சியை அடிமட்டத்திலிருந்து பலப்படுத்துவதே தமது முதன்மை இலக்கு. அதற்கான விசேட வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்து நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் சமரை மிகவும் வலுவான முறையில் எதிர்கொள்வதற்குக் கட்சி தயாராகி வருகின்றது. நாம் நிச்சயம் அந்தச் சமரை எதிர்கொள்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# மனித குலத்துக்கு எதிரானது பயங்கரவாத மாற்றுச்சட்டம்!

## பிரியதர்ஷன யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, பெப்.14

அரசாங்கம் தற்போது தயாரித்துள்ள புதிய சட்ட வரைவு மனித குலத்துக்கு எதிரான வகையில் அமைந்துள்ளது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் நான்காம் மாடிக்குச் சென்றால் சந்தேக நபர்கள் மிக மோசமாக நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு அமர்வதற்கு ஒரு கதிரை கூட வழங்கப்படுவதில்லை. இன்றும் அதே நிலையே நீடிக்கிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் பல சித்திரவதைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

1979 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டமானது அப்போதைய சூழலுக்குத் தேவையான ஒரு 'தற்காலிக ஏற்பாடாகவே' உருவாக்கப்பட்டது. அரசாங்கம் தற்போது முன்மொழிந்துள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவும் மனித குலத்துக்கு எதிரான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. காலாவதியான மற்றும் ஒடுக்குமுறை சார்ந்த சட்டங்களுக்குப் பதிலாக மனிதநேயமிக்க புதிய சட்டங்களை உருவாக்க அரசாங்கம் முன்வரவேண்டும் - என்றார். (ச-இ)

# புதிய சட்டவரைவு பயங்கரமானது



## பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.14

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் காட்டிலும் பாரதூரமான வகையில் பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,

இந்த சட்டவரைவு சட்டமானால் நாட்டின் ஜனநாயகம் மற்றும் அடிப்படை மனித உரிமைகள் சவப்பெட்டிக்குள் செல்லும். இந்தச் சட்டவரைவை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவேன். பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவில் 'பயங்கரவாதம்' என்பதற்கு விரிவான வரைவிலக்கணம் அளிக்கப்பட்டுள்ளது. இது தனி மனித சுதந்திரம் மற்றும் வாழ்க்கைக்கு மிக மோசமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். 13 சாதாரண குற்றங்கள் இந்த சட்டவரைவில் பயங்கரவாதமாக குறிப்பிடப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

# அநுரவின் அரசாட்சியில் ஊழலுக்கு இடமில்லை

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், பெப்.14

நாட்டில் ஊழல் மோசடிகளை முழுமையாக இல்லாதொழிப்பதற்கான திட்டங்களை அநுர தலைமையிலான அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற மன்னார் பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு புதிய நியமனம் வழங்கும் நிகழ்வில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நடுத்தர வர்க்கத்தில் உள்ள அரச ஊழியர்கள் மற்றும் வறுமைக்கோட்டுக்கு கீழேயுள்ள மக்கள் மீது, எமது அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது. மக்களைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றக் கூடிய திட்டங்களை நாங்கள் வகுத்திருக்கிறோம். இனிவரும் காலங்களில் அதற்குரிய பலன்களை நீங்கள் அனுபவிப்பீர்கள். எனவே உங்களுக்கு வழங்கப்பட்ட பணிகளில் நீங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

ஏதேனும் இடர்பாடுகள் ஏற்பட்டால், பிரதேச செயலர் அல்லது பிரஜா சக்தி தலைவர்கள் ஊடாக அவற்றுக்குத் தீர்வு காண முடியும். அனைவரும் குழுவாகச் சேர்ந்து செயல்பட வேண்டும். டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டிருந்த நாடுகளுக்கு இடையேயான ஊழல் சுற்றறிக்கையில், 121 ஆவது இடத்தில் இருந்த இலங்கை 107 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. கடந்த காலங்களில் ஊழல் எவ்வாறு நடைபெற்றது என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்- என்றார். (க-56)

# உரிமைகளைப் பணயம் வைத்து பாதுகாப்பை உறுதிசெய்யாதீர்!

NATIONAL CHRISTIAN
EVANGELICAL ALLIANCE SRI LANKA

## கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டிணைவு வலியுறுத்து

கொழும்பு, பெப்.14

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றாக அரசாங்கம் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவில் மோசமான சரத்துக்கள் பல உள்வாங்கப்பட்டுள்ளன. சட்டங்கள் பொதுமக்களையும் பாதுகாப்பதாக அமைய வேண்டும்.

இவ்வாறு இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டிணைவு அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

பல தசாப்தங்களாக இன மற்றும் மத சிறுபான்மையினருக்குப் பாதிப்பை ஏற்படுத்திய பழைய சட்டத்தின் மோசமான சரத்துக்கள் பல, இந்தச் புதிய சட்ட வரைவிலும் உள்வாங்கப்பட்டுள்ளது.

ஒடுக்குமுறைச் சட்டங்களை மறுசீரமைப்பதாக அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இந்தப் புதிய சட்டம் ஒரு பின்னடைவை ஏற்படுத்தும். 'பயங்கரவாதக் குற்றம்' என்பதற்குச் சர்வதேச தரத்துக்கு மாறாக மிகப்பரந்த வரைவிலக்கணம் அளிக்கப்பட்டுள்ளது. இது சிவில் அமைப்புகள் மற்றும் மத ரீதியான மனிதாபிமான நடவடிக்கைகளை ஒடுக்குவதற்குப் பயன்படுத்தப்படலாம்.

அடிப்படை உரிமைகளைப் பணயம் வைத்து உண்மையான பாதுகாப்பை ஒருபோதும் உறுதிசெய்யமுடியாது. சட்டங்கள் பொதுமக்களையும் பாதுகாப்பதாக அமைய வேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 23 வது பிறந்தநாள் நினைவும் 9ம் ஆண்டு நினைவஞ்சலியும்

## அமரர் தவத்துரை ஹரிஷன்

(யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி தரம் 8 மாணவன் - 2017)

**மண்ணில்**
**14.02.2003**

**விண்ணில்**
**04.03.2017**





ஆண்டுகள் ஒன்பது ஆகிவிட்டது
ஆறவில்லை எம் துயரம்
ஆறாத துயரில் நாம் இங்கு துடிக்க - நீர்
மீளாத்துயில் கொண்டீரோ
நீர் தந்த நல் நினைவுகள் - எம்
நெஞ்சமதில் நிறைந்திருக்கிறது
இவ் வாழ்க்கை இவ்வுலகில் போதுமென்று
கருதியா சடுதியில் எம்மை விட்டு
மறைந்து சென்றீர்
விடியும் பொழுதெல்லாம் உம் நினைவே
எம் மனதெல்லாம் நிறைந்துள்ளது - நீர்
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உம் சிரித்த வதனம்
எந்நாளும் உயிர் வாழும்
நொன்நொன்னோ, ஆசைப் பவுன்கிளி
மொட்டைபாஸ் என நீர் அழைக்கும்
செல்ல வார்த்தைகளை கேளாது எம்
மனம் துடியாய் துடிக்கிறதே
மண்விட்டு மறைந்து நீர்
விண்நோக்கிச் சென்று
பல ஆண்டுகள் ஆனாலும்
கண் விட்டு மறையாது உம் நினைவுகள்.


ஓம் சாந்தி சாந்தி சாந்தி



**உன் பிரிவால் வாடித்துடிக்கும்**
**அப்பா, அம்மா, அன்புத்தங்கை மது,**
**மாமாமார், பெரியப்பா, பெரியம்மாமார்,**
**அக்காமார், அண்ணா, மச்சான்மார்,**
**மருமக்களான - ரஸ்வினா, சயன், அனுசாலி,**
**மற்றும் பெறாமக்களான - கிருஷ்னி, மழலை.**

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை தங்கராசா



**தோற்றம்**
**01.03.1952**

**மறைவு**
**10.02.2026**

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் களபாவோடை ஏழாலை, கொலண்ட் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், புத்தூரை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை தங்கராசா அவர்கள் கடந்த 10.02.2026 செவ்வாய்க்கிழமை அன்று இறைவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சிதாதேவி அவர்களின் அன்பு மனைவியும், கௌரி (கனடா), கௌசியா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுஜித்குமார் (கனடா), லோகநாதன் (கண்ணன் - கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தவரத்தினம், சரஸ்வதிதேவி, புவனேந்திரன் (குட்டி - ஜேர்மனி), நடராசா (அப்பன் - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, லிங்கேஸ்வரி, சுகிர்தராணி, பேரின்பநாதன் மற்றும் குகேந்திரன் (சிறி - ஜேர்மனி), காலஞ்சென்ற மகாராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சர்ஜனா. அனிஷ், அனிக்ஷா, அக்ஷாந், நிக்ஷிகா, நிஷானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2026) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கருதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வங்கி ஒழுங்கை,**
**புத்தூர் வடக்கு, புத்தூர்.**
**தொடர்பு: உதயன் (பெறாமகன்)**
**077 774 6675**

**தகவல்**
**குடும்பத்தினர்**

cs 60727) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2026 March Intake

BEd, BA in English,
BA in Early Childhood
and Primary Education

இறுதியாண்டு நேரடி உள்நுழைவு
HND / Training college
or college of Education

மேலதிக விபரங்களுக்கு:
DTPE CAMPUS 077 543 8086,021 43 80 273

(CS 31267) A



## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியிலுள்ள எமது நிறுவனத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

1. எலக்ரிக் வயரிங். பிளம்பிங் தெரிந்த உதவியாளர்கள்
2. கணக்கியல் பயிலுனர்கள் (HNDA மாணவர்கள் மற்றும் கணக்கியல் அனுபவம் உள்ளவர்கள்).
3. சமையல் வேலை ஓரளவு தெரிந்த காரியாலய பராமரிப்பாளர்.

தொடர்புகளுக்கு:
077 95 30 496

(CS 31259) A



## மகா சிவராத்திரி - 15.02.2026

கண்ணகை அம்மன் என வழங்கும்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
புங்குடுதீவு

முதலாம் சாமபூஜை மாலை 6.00 மணிக்கு ஹோமம் வளர்த்து அபிஷேகம், பூஜை தொடர்ந்து

இரண்டாம் சாமம் 9.00 மணிக்கு 108 சங்காபிஷேகமும், 12 மணிக்கு சிவலிங்கத்திற்கு மாதுளம்பழ அபிஷேகம், பூஜையுடன்

மூன்றாம் சாம பூஜை நிறைவடைந்து அதிகாலை 4 மணிக்கு நான்காம்சாமம் பரிவாரமூர்த்திகளுக்கு அபிஷேகம் இடம்பெற்று அம்பாள் தீர்த்தமாடி வீதி உலா வந்து மண்டபப்படி இடம்பெற்று பிரசாதம், அன்னதானம் வழங்கப்படும்.


# குடாநாட்டில் பெரும்போக நெல் அறுவடை மும்முரம்

யாழ்., பெப்.14

குடாநாட்டில் பெரும்போகத்துக்கான நெல் அறுவடை செய்யும் பணிகள் மும் முரமாக இடம்பெற்று வருகின்றன. அநேகமான வயல்களில் வெள்ளம் வற்றாத நிலையிலும், சீரற்ற காலநிலையால், விவசாயிகள் வேகமாக அறுவடையை ஆரம் பித்துள்ளனர். சில பகுதிகளில் அறுவடை செய்யப் பட்ட நெல் உலரவிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் இறுதியில் தொடர்ச்சியாகப் பெய்த மழையால் பெரும்போகத்துக்கான விளைச்சல் பெரிதும் பாதிக்கப் பட்டிருந்தது. இதனால் இம் முறை குறைந்த எவு நெல் விளைச்சலையே விவசாயிகள் அறுவடையாகப் பெற்றுள்ளனர். எனினும் தற்போது மழைக்கான வாய்ப்புகள் எதிர்பார்க்கப் படுவதால், நெல் அறுவடையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

(சு-17)


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
உயர்தர உணவகம் ஒன்றிற்கு
வேலையாட்கள் தேவை.

- WAITER
- KITCHEN HELPER
- DISH WASHER
- TABLE CLEANER
- BARISTA HELPER
- RECEPTIONIST
- CASHIER

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தேவைப்படின் தங்குமிடம் வழங்கப்படும்.
வெளிமாவட்டத்தவர்களும்
விண்ணப்பிக்கலாம்

தொடர்புகளுக்கு:- 077 077 0333

(CS/31258) J-1


## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 . 06 . 1946

உதிர்வு 10 . 02 . 2010



### திருமதி ருக்மணி நடராசா

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும் மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று பதினைந்து ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

138 A, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில்:
நடராசா (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

CS/31255) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 10 1924

மறைவு 10 02 2026



### திருமதி ஞானபூபதி சண்முகம்

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானபூபதி சண்முகம் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.கந்தையா சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செபரட்னம். துரைரட்ணம் மற்றும் சரோஜினியின் (வவி - கனடா) சகோதரியும் தெய்வேந்திரன் (கனடா). சிவபூசணி (கனடா). ஜெயபூசணி. கோகிலபூசணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆனந்தி (கனடா). சின்னத்தம்பி (கனடா). காலஞ்சென்ற திருநீலகண்டன் ஆகியோரின் மாமியாரும் கிரிதா - கஜோபன். கம்ஷா - உதயசங்கர். ஜெனீவன் - சரித்தா. சர்மிலி - சர்மிலன். சபேசன் - அர்ச்சனா. கஸ்தூரி - கௌத்தராம் ஆகியோரின் அன்புப் பேத்தியும் மதின். சிவேகா. மயூரா. தியானா. பிரணன். கபிலன். துருவன். சவீனா. சாஜனா. அரின்யா. சஹானா. மகித்தா. தாரகை ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 15.02.2026 நாளை ஞாயிற்றுக்கிழமை 8.00 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 2.00 மணிக்கு பொரளை கனத்தையில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் - குடும்பத்தினர்

தெய்வேந்திரன் - 076 7988640, ஜெயம் - 0777212550
சின்னத்தம்பி - +1 (647) 787-8178

## விழி நீரால் நனையும் 31ஆம் நாளில்

மண்ணில் 24 . 05 . 1935

விண்ணில் 15 . 01 . 2026



### அமரர் இராசையா சிவபாக்கியம்

திதி: தை அபரபட்ச துவாதசி (14.02.2026)

மாதம் ஒன்று ஆனதம்மா எம்மை விட்டு நீ பிரிந்து
மாதாவாய் நீ கிடைக்க என்ன தவம் செய்தோமோ
ஊர் போற்ற உத்தமியாய் இவ்வுலகில் நீ வாழ்ந்தாய்
பேர் விளங்க எம்மை எல்லாம் வளமுடனே வாழ வைத்தாய்
மக்கள். மருமக்கள். பேரமக்கள். பூட்டமக்கள்
சொந்த பந்தம் யாவரையும் பாசத்துடன் அணைத்தெடுத்தாய்
அக்கம் பக்கம் எல்லாம் உன் உறவுகள்தான் இங்கு அம்மா
நீ இருந்த இடம் எமக்கு இங்கு வெறிச்சோடிப் போனதம்மா
அம்மா நீ இன்றில்லை உன் இனிய குரல் கேட்கவில்லை
அம்மா நீ போன இடம் தேடி வரக் கிட்டாது
ஆறாது எம் மனது ஆயிரம்தான் இருந்தாலும்
தேற்றுகின்றோம் எம் மனதை உம் ஆத்மா சாந்திக்காய்
எம் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

"ராச சௌந்தர்யம்"
22/4, மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.

(CS/31257) J-1


## வேலையாட்கள் தேவை

இல.310A, Hospital வீதியில்
அமைந்துள்ள வியாபார நிலையத்திற்கு
விற்பனை உதவியாளர் தேவை.
சம்பளம், நேரில் பேசித்
தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0777 76 35 33



## காணி உடனடி விற்பனைக்கு

யாழ். அரியாலையில் 24 பரப்பு குடியிருப்புக் காணி உடனடி விற்பனைக்கு. 3 அறை வீடு, 2 கிணறுகள், 40 தென்னை மரங்கள் கொண்டது. A-9 கண்டி வீதி 200 மீ தூரத்தில். யாழ். நகர் 15 நிமிடம்.

விபரங்களுக்கு:
074 300 7992
WhatsApp +44 7414 942508


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலை நகுலேஸ்வரத்தில் 12 ஜோதிலிங்க தரிசனம்



யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க புனித பூமியான கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய முன்றலில், இன்று 13 ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை காலை 10 மணி முதல் மாலை 6 மணிவரை பாரத தேசத்தின் பல்வேறு மாநிலங்களில் அமைந்துள்ள, அளப்பரிய மகிமை வாய்ந்த பன்னிரு ஜோதிலிங்கங்களை ஒரே இடத்தில் தரிசிக்கும் அரிய வாய்ப்பை பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம் இம்முறை பக்தர்களுக்கு வழங்குகின்றது.

பன்னிரு ஜோதிலிங்கங்களின் ஆன்மீக தாற்பரியம் இந்தக் கண்காட்சியில் இடம்பெறும். ஒவ்வொரு ஜோதிலிங்கமும் மனித வாழ்க்கையின் வெவ்வேறு ஆன்மீகத் தேவைகளையும், இறைவனின் குணாதிசயங்களையும் உணர்த்துகின்றன.

**சோமநாதர்**
சோமநாதர் ஜீவாத்மாக்களுக்கு ஆன்மீக ஞானம் எனும் சோமரசத்தை அளித்து அவர்களுக்கு முக்தியையும், நிரந்தரமான சந்தோச வாழ்க்கையையும் அடையும் வழியைக் காட்டுபவர்.

**நாகேஸ்வரர்**
கலியுகத்தில் மனித ஆத்மாக்களிடத்தில் இருக்கும் தீய குணங்களை ஞான, யோக சக்தியால் அழித்து அவர்களுக்கு உண்மையான சுகத்தை அடைவதற்கான வழியைக் காட்டுபவர்.

**பீமா சங்கர்**
தீயகுணங்களிற்கு அடிமைப்பட்டு இருப்பவர்களிற்கு, அவற்றிலிருந்து உண்மையான விடுதலை அளிப்பவர்.

**ஓங்காரேஸ்வரர்**
ஓம் என்றால் ஆத்மா எனும் ஆன்மீக மந்திரத்தின் சத்தியமான பொருளை எடுத்துணர்த்தி மனித வாழ்வை ஒளிபெறச் செய்பவர்.

**காசி விஸ்வாநாதர்**
படைப்பிற்கு மூலப்பொருளாக விளங்கி அனைவருக்கும் ஆதாரமாக விளங்கும் விஸ்வநாதர் மோட்சத்திற்கும், முழு உலகிலுள்ள ஆன்மாக்கள் அனைவரதும் விமோசனத்திற்கும் வழிகாட்டுபவராகவும் உள்ளார்.

**கேதாரநாதர்**
எவர் ஒருவர் தன்னுடைய மனம் புத்தியை, இறைவனிடத்தில் அர்ப்பணித்து அவர் வழி நடக்கிறாரோ, அவருடைய அனைத்துத் துன்பங்களையும் நீக்கி சுகத்தை அருளுபவர்.

**மல்லிகார்ஜுனர்**
அனைத்து ஆத்மாக்களின் தந்தையான சிவன் தன் குழந்தைகளாகிய ஜீவாத்மாக்களுக்கு தன்னுடைய ஜோதி சொரூபத்தை உணர வைத்து, அவர்களை மீண்டும் மாயையை வென்ற அர்ஜுனர்களாக மாற்றியதால், இறைவனை மல்லிகார்ஜுனர் என அழைத்து மகிமை செய்கின்றனர்.

**மகாகாலேஸ்வரர்**
இக்கலியுகத்தின் இறுதியில் அவதரித்து அனைத்து ஆத்மாக்களுக்கும் முக்தி அளித்து அவர்களைத் தன்னுடன் மோட்சத்துக்கு அழைத்துச் செல்பவர்.

**இராமேஸ்வரர்**
ஸ்ரீ இராமர், இராவண வதம் முடித்துத் திரும்புகையில் ஸ்ரீ சீதாதேவி சமேதராக கடற்கரையில் லிங்கம் அமைத்து வழிபட்ட தலமே இராமேஸ்வரம் ஆகும்.

**திரியம்பகேஸ்வரர்**
இக் கோயிற் கற்பகிரகத்தினுள் ஒரு குழியில் மூன்று லிங்கங்கள் ஒன்றிணைந்து கை பெருவிரல் போன்று காணப்படுகிறது. மனித ஆத்மாக்கள் இறைவன் அளிக்கும் மூன்று கால, மூன்று லோக ஞானம் எனும் கங்கையில் மூழ்குவதன் மூலம் ஆத்மாக்கள் தூய்மை அடையமுடியும் என்ற ஆன்மீக சிறப்பைக் கொண்டுள்ளது.

**வைத்தியநாதர்**
காமம், கோபம் போன்ற துர்க்குணங்களினால் பாதிக்கப்பட்டு துக்கத்திலும் அமைதியின்மையிலும் வாழும் மனித ஆத்மாக்களுக்கும் தீராத பிணியால் பீடித்து மருத்துவர்களால் கைவிடப்பட்டு அடைக்கலமாவோரை வைத்தியருக்கெல்லாம் மருத்துவரான வைத்தியநாதர் ஒருபோதும் கைவிடுவதில்லை. காரணம் அவரே பரம மருத்துவரும், பரம சத்திரசிகிச்சை நிபுணரும் ஆவார். அதுபோல ஆத்மாவில் பீடித்திருக்கும் அனைத்துக் கவலைகளையும் போக்கும் மருந்தை வழங்கும் மருத்துவரே அவரே ஆவார்.

**கிருஸ்ணேஸ்வரர்**
சதா இறை நாமத்தைச் சிந்தையில் கொண்டிருக்க வேண்டும் என்பதை உணர்த்துபவரே கிருஷ்ணேஸ்வரர் ஆவார்.

வெறும் தரிசனத்தோடு மட்டுமன்றி, பக்தர்களின் வாழ்வியல் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையில் மூன்று முக்கியமான அம்சங்கள் இங்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

அதன்படி "நான் யார்? இழந்த அமைதியையும் மகிழ்ச்சியையும் மீண்டும் பெறுவது எப்படி? இறைவனுக்கும் எனக்குமான தொடர்பு என்ன?" போன்ற ஆழமான கேள்விகளுக்கு எளிய முறையில் விடை பகிரும் வகையில் இந்தப் படவிளக்கக் கண்காட்சி அமையும்.

நம்மை வருத்தும் மனக்கவலைகளையும், தீய எண்ணங்களையும் இறைவனிடம் கையளித்து, மனச்சுமை நீங்கி இலேசான உணர்வைப் பெறுவதற்காக இந்த ஆன்மீக யாக குண்டம் அமைக்கப்பட்டுள்ளது. உலகில் ஆத்ம அமைதியையும் சக்தியையும் நேரடியாக அனுபவம் செய்ய தியானப் பயிற்சிகளுக்கும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன, மத, மொழி பாகுபாடின்றி அனைவரும் கலந்துகொள்ளக்கூடிய இந்த ஆன்மீகப் பயணம் முற்றிலும் இலவசமானது. மேலதிக விவரங்களுக்கு பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் 021 222 6432 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம்.



## வவுனியாவில் கார் விபத்து

வவுனியா, பெப்.14

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் ஏ-9 பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் காரில் பயணித்தவர்கள் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கட்டுப்பாட்டை இழந்த கார் வீதியை விட்டுவிலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. கனகராயன்குளம் பொலிஸார் விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-9)

## தனியார் காணிக்குள் புகுந்து காட்டுயானைகள் அட்டகாசம்

கிளிநொச்சி, பெப்.14

தருமபுரம் பகுதியில் விவசாயி ஒருவரின் காணிக்குள் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த காட்டுயானைகள், அங்கிருந்த வாழை மரங்கள் மற்றும் தென்னங்கன்றுகளை முற்றாக அழித்துள்ளன. புளியம்பொக்கணை கம நலசேவை பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் ஒரு ஏக்கர் காணியில் வாழ்வாதாரத்துக்காக வைக்கப்பட்டிருந்த வாழை மற்றும் தென்னங்கன்றுகளே இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன.

அறுவடைக்குத் தயாராகவிருந்த வாழை மரங்களை யானைகள் அழித்துள்ளன. இதனால் பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-113)



பளை இந்து ஆரம்ப வித்தியாலய மாணவர்களின் மெய்வன்மைப்போட்டி அண்மையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி வடக்கு வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ. சகிலன் கலந்து கொண்டார். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்குரேகொடவில் இருவர் சுட்டுக்கொலை

## சந்தேகநபர்களைப் பிடிக்க 10 விசாரணைக் குழுக்கள்

கொழும்பு, பெப். 14
அக்குரேகொட பகுதியில் உள்ள ஒரு பல்பொருள் அங்காடிக்கு அருகில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், சட்டத்தரணி ஒருவரும் அவருடைய மனைவியும் கொல்லப்பட்டுள்ளனர்.
தாக்குதலை நடத்திய சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர்களைக் கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
பொலிஸ்மா அதிபரின் நேரடி ஆலோசனைக்கு அமையவே இந்த விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ம)

### சிவராத்திரி...

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:-
வெடுக்குநாறிமலையில் கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற சிவராத்திரி வழிபாடுகளில் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. பக்தர்கள் மீது பொலிஸாரால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், பக்தர்களுக்கு உரிய குடிதண்ணீரைக் கொண்டு செல்வதற்குக்கூட தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. எனவே இம்முறை சிவராத்திரி தின வழிபாடுகளுக்கு அவ்வாறான இடையூறுகள் ஏற்படுத்தக்கூடாது. சைவமக்கள் சுதந்திரமாக வழிபடுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும். அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான வழிபாட்டுரிமை பாதுகாக்கப்பட வேண்டும் - என்றார்.
இதையடுத்து, இம்முறை வழிபாட்டுச் சுதந்திரம் முற்றுமுழுதாக உறுதிப்படுத்தப்படும் என்று வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித்தார். (அ-ம-19-110)

### அரகலய போராட்டம்...

பட்டு விசாரணை நடத்தப்படும் - இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறைவேற்றவில்லை. ஊழல் மோசடிக்கு எதிரானவர்கள் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், ஊழல்களிலும் மோசடிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அரசாங்கத்தின் ஊழல்கள் தொடர்பில் நாம் கதைப்பதால்தான் எமக்கு எதிராக அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன.
தமது அரசியல் நலன்களுக்காக இளைஞர்களைப் பணயம் வைக்கும் நடவடிக்கையை 1988ஆம் ஆண்டிலிருந்து ஜே.வி.பி. செயற்படுத்தி வந்துள்ளது. பல இளைஞர்கள் அவர்களால் உயிரிழந்தனர். அரகலயவின் போதும் அதுதான் நடந்தது. அரகலய தொடர்பிலும், அதற்காக வெளிநாடுகளில் இருந்து வந்த பணம் மற்றும் பின்புலம் தொடர்பிலும் எமது ஆட்சியில் ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படும் - என்றார். (அ-ம)

### பேரவையிலிருந்து...

திருந்த நிலையில், அவரை மீளவும் பதவியில் அமர்த்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் சில பல்கலைக் கழகங்களின் பேரவை நிர்வாகங்கள் மாற்றியமைக்கப்பட்டன. இந்த நடவடிக்கையின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையில் இருந்து, காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் வடமாகாணப் பணிப்பாளர் விமலன் அவருடைய பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே விலக்கப்பட்டிருந்தார். இதற்கு எதிராக அவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததற்கு அமைய, இந்தப் பதவி நீக்கம் தவறானது என்றும், அவரை மீண்டும் பேரவை உறுப்பினராக இணைக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
2027ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதிவரை செல்லுபடியாகக் கூடிய வகையில் இந்த நியமனம் மீள வழங்கப்பட்டுள்ளது. இதற்காக அவரின் திருத்தப்பட்ட சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்குமாறும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (அ-ம)

### சமஷ்டி...

பேரவை அழைப்பு விடுத்துள்ளது.
இதுதொடர்பில் தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-
இனப் பிரச்சினைக்கான நிலையான அரசியல் தீர்வாகத் தமிழ் மக்கள் சமஷ்டியையே தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். இருப்பினும் தமிழர்களின் அந்த அபிலாஷையைப் புறக்கணிக்கும் வகையில், ஏக்கிய இராச்சிய அரசமைப்பை தமிழர்களுக்குத் தீர்வாக வழங்குவதற்கு ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எனவே, இந்தச் செயற்பாட்டை தடுத்து நிறுத்தி, தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டியை முன்னிறுத்த வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. இதுதொடர்பாக அரசியல் தரப்புக்களும், சிவில் அமைப்புக்களும் இணைந்து பொது இணைக்கப்பாட்டுக்கு வருதல் அவசியமாகவுள்ளது.
ஆதலால், தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அரசு கொண்டு வரவுள்ள ஏக்கிய இராச்சிய வரைவை நிராகரித்து அதற்குப் பதிலாகச் சமஷ்டி தீர்வை ஒரே குரலில் முன்வைப்பது தொடர்பான கலந்துரையாடல் தமிழ்த்தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது - என்றுள்ளது. (அ-ம-66)

### சட்டவிரோதக்...

டன. முல்லைத்தீவு சுற்றுலாக் கடற்கரைப் பகுதியில் போராட்டத்தை ஆரம்பித்த மீனவர்கள், அதன் பின்னர் பேரணியாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம்வரை சென்றனர். முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் ஒப்படைத்தனர்.
இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்ததாவது:-
இந்திய மீனவர்கள் மட்டுமல்லாமல், தென்னிலங்கை மீனவர்களும் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. எனவே, இந்த நிலைமையை தொடர்ச்சியாக அனுமதிக்க முடியாது. அனைத்துவிதமான சட்டவிரோத நடவடிக்கைகளையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும் - என்றனர். (அ-ம-19)

### மணல்...

னம் பொலிஸாரின் உத்தரவைக் கண்டுகொள்ளாமல் பயணித்துள்ளது. இதையடுத்தே அந்த வாகனத்தின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.
சந்தேகநபர்கள் தப்பியோடிய நிலையில் அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-க-113-55)

### முன்னாள்...

(வயது-91) நேற்றுக் காலமானார். லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவராக நீண்டகாலம் செயற்பட்ட திஸ்ஸ விதாரண, மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்தார். மஹிந்தவின் அரசாங்கத்தால் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு ஆபத்து நேர்ந்தபோது, 13ஆவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தை விட்டு வெளியேறவும் தயாராக இருந்தார். ராஜித சேனாரத்ன, டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண ஆகியோர் வெளிப்படுத்திய எதிர்ப்புக் காரணமாகவே 13ஆவது திருத்தத்தை நீக்கும் நடவடிக்கைகளை மஹிந்த ராஜபக்ச கைவிட்டிருந்தார்.
அரசியலில் இருந்து ஓய்வுபெற்ற பின்னரும் அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி வந்த பேராசிரியர் திஸ்ஸ விதாரண, வயோதிபம் காரணமாக நேற்றுக் காலை உயிரிழந்தார். (அ-ம-44)

அறை வாடகைக்குத் தேவை
யாழ். பல்கலைக்கழக 1ம் வருட பெண் மாணவிக்கு பாதுகாப்புடன்கூடிய அறை 1-4 வருடங்களுக்கு வாடகைக்குத்தேவை.
பல்கலைக்கழகத்தில் இருந்து நடை தூரத்தில் விரும்பத்தக்கது. (A/C அறை இருந்தால் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 078 4411
077 603 1545

### பங்கசுத்...

இந்துஜா சிவலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.
பொலிகண்டி பொதுச்சுகாதார பரிசோதகர் மதியானந்தகுரு நந்தகுமாரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, வணிக நிலையமொன்றில் பங்கசுத் தொற்றுடன் கட்டைத்தூள் விற்பனைக்கு வைக்கப்பட்டமை கண்டறியப்பட்டது. இதையடுத்து, குறித்த கட்டைத்தூளை உற்பத்தி செய்து விநியோகம் செய்த உற்பத்தியாளருக்கு எதிராகவும், அதை விற்பனைக்காக வைத்திருந்த கடை உரிமையாளருக்கு எதிராகவும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது,
குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தம்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர். இதையடுத்து, கட்டைத்தூள் உற்பத்தியாளருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டமும் ஒரு மாதகால சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. அத்துடன் அதை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (அ-ம-100)

### அரகலய...


டும் என்று நாமல் ராஜபக்ச தெரிவித்த கருத்துக்குப் பதிலடியாகவே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-
அரகலய போராட்டம் ஜனநாயக ரீதியில் மிகவும் அமைதியான முறையிலேயே இடம்பெற்றது. நீண்ட நாள்களாக ஜனநாயக முறையில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்தே அது கலவரமாக மாறியது. எனவே, போராட்டத்தைக் கலவரமாக மாற்றியவர்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம்பெற வேண்டும் - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

**தோற்றம்**

**01 . 06 . 1932**



**மறைவு**

**09 . 02 . 2026**

**"சேவைச் செம்மல்"**

## வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை J.P
## V.C. சபாரத்தினம்

**முன்னாள் வருமான மேற்பார்வையாளர் (நெடுந்தீவு நானாட்டான் முருங்கன் பிரதேச சபை,**
**முன்னாள் பிரதம வருமான பரிசோதகர் (யாழ். மாநகர சபை),**
**முன்னாள் பிரதேச சபைத் தலைவர் (நெடுந்தீவு),**
**முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் (நெடுந்தீவு மேற்கு, நல்லூர் தெற்கு),**
**முன்னாள் சனசமூக நிலைய செயலாளர் (நெடுந்தீவு மேற்கு, நல்லூர் தெற்கு),**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவுப் பிரிவு முன்னாள் தலைவர்,**
**நல்லூர் லயன்ஸ் கழக முன்னாள் உறுப்பினர்,**
**நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவு சங்க முன்னாள் இயக்குனர், நல்லை ஆதின சபை உறுப்பினர்.)**

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது இல.72, செட்டித்தெரு, நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை அவர்கள் கடந்த 09.02.2026 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அபிராமிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வயித்திலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் இளைய புத்திரனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பொன்னையா, சுப்பிரமணியம், குமாரசுவாமி, பொன்னம்மபலம், ஐயாத்துரை, தெய்வானைப்பிள்ளை, நாகமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியவரதன் (தவிசாளர், நெடுந்தீவு), நிர்மலா (முன்னாள் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்), கிருபாவரதன் (முன்னாள் பல.நோ.கூ. சங்க முகாமையாளர்), கோகுலவரதன் (லண்டன்), சந்திரகலா (ஆசிரியர், வைத்தீஸ்வராக்கல்லூரி), விஜயலதா (லண்டன்), பத்மவரதன் (கனடா), தவமேகலா (லண்டன்), பானுகலா (பிரான்ஸ்), அருள்வரதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மஞ்சுளா, பாக்கியலட்சுமி, சுகுந்தலாதேவி (லண்டன்), புவனேந்திரா, தருமரத்தினம் (லண்டன்), பொன்மதி (கனடா), செல்வராசா (லண்டன்), சபேசன் (பிரான்ஸ்), ஜானகி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், குமரன் (மென்பொருள் பொறியியலாளர், லண்டன்), குகப்பிரியன் (மருத்துவபீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்), ஜனகன் (வர்த்தக பீட மாணவன், நொதேன் பல்கலைக்கழகம்), துவாரகன் (மருத்துவபீட மாணவன், ஜெயவர்த்தனபுர), மகிபன் (மருத்துவப பீட மாணவன், இம்பீரியல், லண்டன்), நிருஜன் (வணிகத்துதறை மாணவன், கொவென்றி லண்டன்), கினோஜா (மாணவி, லண்டன்), மதுசன் (மென்பொருள் பொறியியல் மாணவன், நொதேன் பல்கலைக்கழகம்), நிரோஜன் (மாணவன்), கிந்துஷன் (மாணவன்), அபியதர்சன் (மருத்துவ பீட மாணவன், அஸ்டன் - லண்டன்), விட்டலன் (மாணவன், கனடா), லக்ஷினி (மாணவி, கனடா), யனுசா (தாதியத்துறை மாணவி, லண்டன்), தனுஷா (மாணவி, லண்டன்), அனுராஜ் (மாணவன், லண்டன்), அபிராஜ் (மாணவன், லண்டன்), பானுஷன் (விமான பொறியியல்துறை மாணவன், பிரான்ஸ்), டினோஜா (சட்டத்துறை மாணவி, பிரான்ஸ்), கபிசன் (பொறியில்துறை மாணவன், பிரான்ஸ்), அபிசன் (மாணவன், பிரான்ஸ்), ஆருத் (மாணவன், லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.72, செட்டித் தெரு,**
**நல்லூர்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CS 31262) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.